முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS 29/2022

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் வா.த.சா.2 ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கலா | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**குறுக்கு விசாரணை :** என் தந்தை மற்றும் தாத்தாவின் சொத்தில் 3ல் ஒரு பங்கு உரிமை கோரி வழக்கு போட்டுள்ளேன். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் தாத்தா சம்பாதித்த சொத்துக்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கிரையப்பத்திரங்கள் அனைத்தும் என் தாத்தா கோவிந்தபடையாட்சி கிரையம் செய்த பத்திரங்கள் தான் என்றால் இல்லை என் அப்பா கிரையம் செய்த பத்திரத்தையும் தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா கிரையம் வாங்கி கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அது எத்தனையாவது ஆவணம் என்றால் எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா 1984 ல் இறந்தார். வழக்கு சொத்து சம்பந்தமாக கடந்த 22.03.1993 ல் நான் என் அம்மா, என் சித்தப்பா ஆகியோர்கள் பாகப்பத்திரம் எழுதினோம் என்றால் இல்லை. என் கல்யாண நெருக்கடி வந்ததால் குறிப்பிட்ட அளவுக்கு

ஆவணமாக எழுதினோம். அது எந்த வகையான ஆவணம் என்றால் அவசரத்தில் நான் கையெழுத்து செய்ததால் எந்த ஆவணம் என்று தெரியாது, கையெழுத்து போட சொன்னார்கள் போட்டேன். அந்த ஆவணத்தின் அசல் எங்குள்ளது என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட ஆவணமா என்றால் இதுவும் ஒன்று. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த ஆவணத்தின் நகல் என்றால் சரிதான். அந்த ஆவணத்தினை என் சித்தப்பா என் அம்மாவின் பெயரில் வாங்கினார்.அந்த பாகப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அந்தஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டது யார் என்று எனக்குத் தெரியாது. என் தாய் மாமா பெயர் கோவிந்தசாமி. அவருடைய மகன் மனோகரன் என்றால் சரிதான். மனோகரன் தான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் நிர்பந்தத்தின் பேரில் மிரட்டியதால் போட்டுள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படுவது மனோகரனின் கையொப்பமா என்றால் எனக்குத் தெரியாது. யார் யாரை மிரட்டினார்கள் என்றால் என்னை, என் அம்மா, என் மாமா, அனைவரையும் மிரட்டினார்கள். மிரட்டியது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. எனக்கு ஏ ஷெடியூல் பாகமாக கொடுத்தார்கள். எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தின் ஒரு பகுதியை யாரிடம் கிரையம் கொடுத்தேன் என்றால் என்அப்பாவின் பெயரில் பட்டா இருந்த சொத்தினை தான் தயாளன் என்பவரிடம் கிரையம் கொடுத்தேன். அதற்கு யார் சாட்சி கையொப்பம் போட்டோம் என்றால் நானும்

என் அம்மாவும் சேர்ந்து கிரையம் கொடுத்தோம். என் சித்தப்பா தான் அதனை விற்று பணத்தினை பெற்று கல்யாண கடனை பைசல்செய்தார். இந்த விவரத்தினை நான் வழக்கிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நானும் என் அம்மாவும் சேர்ந்து கிரையம் கொடுத்த கிரையப்பத்திரன் நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஷாட் சைஸ் என்பதால் எனக்குத் தெரியவில்லை, ஆனால் என் சித்தப்பா சொன்னதால் செய்தோம். ஆவண எண் 367/1993 ன் மூலம் கிடைத்த சொத்தினை தான் தயாளனுக்கு கிரையம் கொடுத்தாக உள்ளது என்றால் என் அப்பா பெயரில் இருந்ததால் கொடுத்தோம். கிரையப்பத்திரத்தில் என் சித்தப்பா கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். கிரையத்திற்கும் என் சித்தப்பாவிற்கும் சம்பந்தம் இல்லை என்பதும் அவர் முன்னிருந்து எந்த பணத்தினையும் பைசல் செய்யவில்லை என்பதும் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக குறிஞ்சிப்பாடி நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போட்டேன். அந்த வழக்கு எண் தெரியாது. எங்களுடைய இடத்திலிருந்த தேக்க மரங்களை வெட்ட வந்தார்கள் நாங்கள் சொல்லிப்பார்த்தும் கேட்காததால் நீதிமன்றத்தில் வழக்கு கொடுத்தோம். முதலில் கடலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் OS/322/2018 என்ற வழக்கு கொடுத்தோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அந்த வழக்கின் பிராது நகல் என்றால் சரிதான். அந்த பிராது நகல் பி.சா.ஆ.2 ஆகும். தற்போது காட்டப்படும் பட்டா நடராஜன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது பி.சா.ஆ.3 ஆகும். தற்போது காட்டப்படும் பட்டா ராஜ்குமார் பெயரில் உள்ளது அது பி.சா.ஆ.4 ஆகும். என்னிடம் காட்டப்படும் இரண்டு பட்டா கலா பெயரில் உள்ளது பி.சா.ஆ.5 ஆகும். நான்

கிரையம் கொடுத்த சொத்து தயாளன் பெயரில் உள்ளது அது பி.சா.ஆ.6. என்னிடம் காட்டப்படும் பட்டா சடயப்பா படையாட்சி மற்றும் தையல் நாயகி பெயரில் உள்ளது. அந்த பட்டா பி.சா.ஆ.7 ஆகும். கோவிந்தபடையாட்சிக்கு 2 ஆண் பிள்ளைகள். ஒருவர் ராமகிருஷ்ணன் மற்றொருவர் சடையப்ப படையாட்சி, ஒரு பெண் பிள்ளை உள்ளது அவர் பெயர் கணகாயாள். நான் கடலூரில் தாக்கல் செய்த வழக்கு குறிஞ்சிப்பாடி நீதிமன்றத்தில் மாற்றம் செய்யப்பட்டு அங்கு 44/2019 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். என் சித்தப்பா குத்து மதிப்பாக கொடுத்த பாகத்தின் அடிப்படையில் அவர் அவர்கள் பிரித்துக்கொண்ட பட்டா. அது சரியில்லை என்று தான் பாகம் பிரிக்க கோரியுள்ளேன். அதில் 55 சென்ட் ஒதுக்கப்பட்ட இடத்தின் சர்வே எண் வயது 55 ஆகிறதால் எனக்கு ஞாபக மறதி அதிகமாக உள்ளதால் யோசித்து சொல்ல முடியவில்லை. அதன் சர்வே எண் 52/8 என்றால் தோராயமாக தான் தெரியும், சரியாக தெரியவில்லை. அந்த சொத்தில் தான் நான் வடக்கில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். தெற்கில் யார் வசிக்கிறார்கள் என்றால் யாரும் வசிக்கவில்லை. 2ஆம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் தெரியாது. ஆனால் இந்த சர்வே எண்ணில்இல்லை. 1993ல் ஏற்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு வடக்கும், பிரதிவாதிகளுக்கு தெற்கும் ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை, பேச்சு வார்த்தையில் குத்து மதிப்பாக ஒதுக்கப்பட்டது தான். சித்தப்பா இருக்கும் போதே வாய் மொழியாக பிரித்துக்கொண்டோமா என்றால் தற்போது இருங்கள் அப்புறமாக பிரித்து கொள்ளலாம் என்று சொல்லி ஒரு ஓரமாக இருக்க சொன்னார்கள். குறிஞ்சிப்பாடி நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் நான்

சாட்சியமளித்துள்ளேன். அந்த வழக்கின் தற்போதைய நிலைய Argumentsல் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலையில் தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 3 வருடங்களாக Argumentsல் உள்ளது என்றால் இந்த வழக்கு தொடந்ததால் அந்த நிலையில் உள்ளது. பாகப்பிரிவினை ஆவணத்தில் அடிப்படையில் தான் குறிஞ்சிப்பாடியில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**